எழில்மிகு இயற்கைக் காட்சிகளை
வர்ண புகைப்படத்தில் தந்திடும், தரமான
Sakura - Fuji - Kodak - Tudor
வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
தொலைபேசி: 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23628

ஏடு: 1 யாழ்ப்பாணம் [illegible] சித்திரை மீ 31 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரம்ழான் பிறை 4 (14-05-1986) UTHAYAN : A LIVELY TAMIL DAILY இதழ்: 151

# தமிழ் குழுக்களுடன் பேசுவதற்குத் தயார்!

## அத்துலத்முதலி அறிவிப்பு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 14

இந்தியாவின் உதவியுடன் இணக்கமான புதிய யோசனைகள் உருவாகுமானால் அவை குறித்து தமிழர் அமைப்புக்களுடன் (குழுக்களுடன்) பேச இலங்கை அரசு தயாராக உள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி, இந்திய பாதுகாப்பு திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு டிக்ஸிற் நேற்றுக் காலை அமைச்சர் அத்துலத் முதலியைச் சந்தித்தார்.

### அரசின் யோசனைகள்

சட்டம், ஒழுங்கு பற்றிய அதிகாரங்கள் குறித்து மேலதிக விபரங்களைப் பெறவே திரு. டிக்ஸிற் அமைச்சரைச் சந்தித்தார்.

அப்போதே அமைச்சர் லலித் அத்துலத்முதலி இணக்கமான புதிய யோசனைகள் உருவாகுமானால் அவை குறித்து தமிழர் குழுக்களுடன் பேச இலங்கை அரசு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

திரு டிக்ஸிற் பின்னர் அமைச்சர் தொண்டமானைச் சந்தித்தார். பிற்பகல் நிதி அமைச்சர் ரொனி டிமெல்லைச் சந்தித்தார்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணுவதன் அவசியம் பற்றி திரு. டிக்ஸிற் அமைச்சரிடம் எடுத்துச் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் அபிலாஷைகளை தீர்ப்பதற்குப் போதா

### சிதம்பரம் வெளியிடும் கருத்து

சென்னை, மே 13

இலங்கை அரசின் யோசனைகள் தமிழர் அபிலாஷைகளைத் தீர்க்கப் போதுமானவையாக இல்லை. இப்படி இந்திய அமைச்சர் ப. சிதம்பரம் சொன்னார்.

இலங்கை சமர்ப்பித்த புதிய யோசனைகள் முன்னர் சமர்ப்பித்தவற்றிலும் பார்க்க முன்னேற்றமாக இருந்தாலும், தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை.

இப்படி திரு சிதம்பரம் குறிப்பிட்டார்.

இதனிடையே லண்டன் டெய்லி டெலிகிராப் நாளிதழ் இலங்கை நிலை குறித்து கருத்து வெளியிட்டுள்ளது. 1984இல் இருந்த அதே நம்பிக்கையின்மை நிலை தான் இன்றும் இலங்கையில் நிலவுகின்றது.

இப்படி அப் பத்திரிகை கூறியது.

## முகாமுக்கு வந்த சடலங்கள்

மட்டக்களப்பு, மே 14

களுவாஞ்சிக்குடி ஆயுதப்படை முகாமுக்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்கள் நேற்று கொண்டு வரப்பட்டன.

சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

## ரூபவாஹினிச் செய்தி: எவ்வித உண்மையுமில்லை

### ஈ. பி. ஆர். எல். எவ்: அறிக்கை

யாழ்ப்பாணம், மே 14

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு ஒத்துழைப்பதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கூறியிருப்பதாக லண்டன் பவத்தை ஆதாரம் காட்டி 'ரூபவாஹினி'யில் ஒளிபரப்பப்பட்ட செய்தியில் எவ்விதமான உண்மையுமில்லை.

மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவது,

(4 ஆம் பக்கம் பார்க்க)

இப்படி ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.



ஒரே சமயம் இப்படிக் காலமாய் உதறானே நடக்குது. இஞ்சால ஆயுதக் குவிப்பும் இராணுவ நடவடிக்கையும், அங்கால பேச்சுவார்த்தையுமா சமகால சாமர்த்தியம் காட்டி வருகினம்...!

# வடபகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

## ஜனாதிபதி தலைமையில் நடந்த மாநாட்டில் ஆராயப்பட்டது

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 14

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன. பலப்படுத்தப்படவும் உள்ளன.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையிலான பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில் இது பற்றி ஆராயப்பட்டது.

நேற்று நடந்த இம் மாநாட்டில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி உட்படப் பாதுகாப்பு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர் என்று தெரிகிறது.

வடபகுதி ஆயுதப்படை அதிகாரியும் இம்மாநாட்டில் கலந்து கொண்டதாகத் தெரிகிறது.

இதனிடையில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் பெருமளவில் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இது பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் ஒன்று அறிவித்துள்ளது.

### தமிழர் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவல்ல

# புதிய மாற்றுத் திட்டத்தை இலங்கையிடம் கேட்டிருக்கிறோம்

## இந்திய நாடாளுமன்றத்தில் புதிய வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, மே 13

தமிழர்களின் அபிலாஷைகளை உள்ளடக்கியதான புதிய மாற்று யோசனையைச் சமர்ப்பிக்கும்படி இந்திய அரசு இலங்கையைக் கோரியுள்ளது.

திட்டவட்டமான தீர்வை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும்.

இல்லையேல் மீண்டும் ஆரம்பமான பேச்சுக்களில் பின்னடைவு ஏற்படும்.

புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் பி. சிவ்சங்கர் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் இப்படிச் சொன்னார்.

தி. மு. க உறுப்பினர் திரு. எம். கோபால்சாமியும் 24 உறுப்பினர்களும் கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணை மீது வெளிவிவகார அமைச்சர் திரு சிவ்சங்கர் பேசினார்.

அவர் சொன்னதாவது: இலங்கையில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் வன்செயல்களை இந்தியா கவனமாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சேரி ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், மே 14

இலங்கை வங்கி, கச்சேரிக்கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய வைகாசி மாத கொடுப்பனவு, இலங்கை வங்கியின் கோட்டை காரியாலயத்தில் வழங்கப்படும்.

இதுபற்றிய அறிவித்தலை கச்சேரி பொறுப்பாளர் தொடர்பாளர் திரு த. குலசேகரம் விடுத்துள்ளார்.

17ஆம் திகதி சனிக்கிழமை சிவில் ஓய்வூதியம் பெறுவோர்க்கும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விதவைகள், அனாதைகள், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகியோர்க்கும் மற்றையோர்க்கும் இக்கொடுப்பனவுகள் காலை 9-00 மணியிலிருந்து, பி. ப. 1-00 மணிவரை செய்யப்படும்.

## தபால்களை திருடியவர்கள்

மட்டக்களப்பு, மே 14

வாழைச்சேனை தபால் நிலையத்தில் திங்கள் இரவு கொள்ளை இடம்பெற்றது.

ஒடுக்கைப் பிரித்து உள்ளே இறங்கியவர்கள் வெளிநாட்டுத் தபால்களை திருடிச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை மயானத்தில் மூவர் சுடப்பட்டனர்

—உதயன் கல்முனைச் செய்தியாளர்—

கல்முனை, மே 14

கல்முனை மயானத்தில் மூன்று இளைஞர்கள் சிறுபடையினரால் சுடப்பட்டனர்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கல்முனை முதலாம் இரண்டாம் குறிச்சிக்கு வந்த களுவாஞ்சிக்குடி முகாம் காடையர்கள் எத்தப் பேரைக் கைது செய்தனர்.

கைதானவர்களில் ஒருவர் கல்முனைப் பொலிஸைச் சேர்ந்த ரகசியப் பொலிஸ் அதிகாரி என்றும் கூறப்படுகிறது.

தமிழ் பெண் ஒருவரை மணம் முடித்த இவர் கல்முனையில் வாழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு, கிழக்கில் ஆயுதப்படை குவிப்பு:-

# இந்திய இராணுவ அதிகாரிகளை அனுப்பி நிலையை அறியுமாறு கோருகிறார் கருணாநிதி

சென்னை, மே 13

தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை நடவடிக்கைகளுக்கு முன் ஆயத்தமாக வெளிநாட்டு யுத்தக் கப்பல்கள் மூலம் ஆயுதங்களையும், படைவீரர்களையும் இலங்கை அரசு வடக்கு கிழக்கில் குவித்து வருகிறது.

தி. மு. க தலைவர் மு. கருணாநிதி இன்று (செவ்வாய்) காலை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய அவசர தந்தி ஒன்றில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தத் தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக இடம் பெற்று வரும் பேச்சுவார்த்தை ஒரு புறம்



மறுபுறத்தில் இலங்கை அரசு வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள தமிழர்களை திட்டமிட்ட முறையில் அழிக்க தயாராகிக் கொண்டிருக்கிறது.

வெளிநாட்டு யுத்தக் கப்பல்கள் மூலம் ஆயுதங்களும், படைவீரர்களும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14-05-1986

புதன்கிழமை

சுபநேரம்:

4.23 முதல் 5.53 வரை

ராகு காலம்:

11.53 முதல் 1.23 வரை

இவை பஞ்சாங்க இயல்புகளுக்கு பொருந்தும்

### நோன்பு நேரம்

சஹர் முடிவு:- 4.19

மக்ரிப்:- 6.20

## சிறீஓ குண்டு: மேலும் இருவர் நேற்று மரணம்

கொழும்பு, மே 14

கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் குண்டு வெடிவிபத்தில் படுகாயமடைந்தவர்களில் மேலும் இரண்டு பேர் நேற்று மரணமானார்கள்.

இத்துடன் இச்சம்பவத்தில் இறந்தவர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று இறந்தவர்களில் ஒருவர் யுவதி மற்றவர் 30 வயது இளைஞன்.

# இலங்கை - இஸ்ரவேல் முழுஅளவு ராஜீயஉறவு

## நலன் காக்கும் பிரிவுத் தலைவர் தகவல்

கொழும்பு, மே 14

இலங்கையுடன் முழு அளவிலான ராஜீகத் தொடர்புகளை விரைவில் இஸ்ரவேல் ஏற்படுத்த உள்ளது.

இத்தகவலை கொழும்பில் உள்ள இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவின் தலைவர் திரு ஹெயிம் டிவோன் வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் ஒன்றிடம் தெரிவித்தார்.

இதனிடையில் இஸ்ரவேல் வர்த்தகத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு வர உள்ளது. மே 23இல் இருந்து 30 வரை இஸ்ரவேல் வர்த்தகக் குழு இலங்கையில் தங்கியிருக்கும்.

இத்தூதுக்குழுவில் 20 பேர் இருப்பர். இலங்கையின் வர்த்தகக் குழு ஒன்று தற்சமயம் இஸ்ரவேலில் சுற்றுப் பிரயாணத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆரின் பயமுறுத்தல் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைப் பாதிக்கும்

### கூட்டணிப் பிரமுகர் கருத்து

லண்டன், மே 13

தனது யோசனைகள் நிராகரிக்கப்பட்டால் இராணுவத் தீர்வு காணப்படும் என்ற ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் பயமுறுத்தல், பேச்சுக்கள் நடத்தும் சூழ்நிலையை உருவாக்க முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கூறியதாக பி. பி. சி. வானொலி செவ்வாய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் கடலில் இரண்டு பெரிய கப்பல்

யாழ்ப்பாணம், மே 14

காங்கேசன்துறைக்கு அப்பால் நடுக்கடலில் இரண்டு பெரிய கப்பல்கள் நேற்று (செவ்வாய்) அதிகாலை காணப்பட்டன.

இக்கப்பல்களை சுற்றி பீரங்கிப் படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்குவதாக அறிவிக்கப்படுகின்றது.

இறக்கப்படும் பொருள்கள் காங்கேசன்துறை இராணுவ முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து பலாலி முகாமிற்கு ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

நடுக்கடலில் நிற்கும் இக்கப்பல்களைச் சுற்றி ஹெலிகொப்டர் ஒன்று அடிக்கடி ரோந்து சுற்றி வருகின்றது.

இக்கப்பல்களில் வெளிநாட்டு தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

நேற்று நண்பகல் மேலும் ஒரு கப்பலில் நூற்றுக்கும் அதிகமான சிப்பாய்கள் காங்கேசன்துறையை அடைந்தனர் என்று தெரிகிறது.

இவர்களை கடலுக்குள் ஹெலிகொப்டர்கள் பலாலி முகாமிற்கு கொண்டு சேர்த்ததாகவும் சொல்லப்படுகிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு முத்திரை பெறுவோர் பட்டியல்

## துரிதமாகத் தயாரிப்பு

யாழ்ப்பாணம், மே 14

யாழ் குடாநாட்டுக்குத் தேவையான உணவு முத்திரைகளை எடுத்து வருவதற்காக உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர் அடுத்த வாரம் கொழும்பு செல்ல இருக்கிறார்.

இதேவேளை உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்து பட்டியல் தயாரிப்பதில் உதவி அரசாங்க அதிபர்கள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

13 உதவி அரசாங்க அதிபர்களில் இருவர், தங்கள் பகுதிகளில் உணவு முத்திரை பெறுபவர்களின் தற்காலிக பட்டியல்களை சமர்ப்பித்து விட்டனர்.

ஏனையோர் இன்னும் சில தினங்களில் சமர்ப்பிப்பர்.

இத் தாமதத்துக்கான காரணங்களில் ஒன்று ஈடுபட்ட ஊழியர்கள் கண்நோயினால் பீடிக்கப்பட்டதும் ஆகும்.

உணவு முத்திரை பெறுவோரின் தற்காலிக பட்டியல்கள் இறுதி அங்கீகாரத்துக்காக அடுத்த வாரம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிகிறது.

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

புங்குடுதீவு, மே 14

அனலைதீவு மத்தியில் உள்ள ஊடுமுருகமூர்த்தி கோவில் வீதி திருத்தி அமைக்கப்பட இருக்கிறது.

இவ்வீதியை திருத்தி அமைப்பதற்கென யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை நடப்பு வருடப் பண்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் அனலைதீவு உப அலுவலகத்தினர் திருத்த வேலைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமூகத்தை பீடித்துள்ள இருள் விலகும்போது சமயமும் சிறப்புறும்

### சமய அபிவிருத்திச் சங்கத் தலைவர்

மட்டக்களப்பு, மே 14

எமது சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள இருள் விரைவில் நீங்கும். ஒளி பிறக்கும். அந்தக் காலம் வரும்போது எமது சமூகம் மட்டுமல்ல, சமயமும் சிறப்புப் பெறும்

மேற்கண்டவாறு மட்டக்களப்பு முன்னாள் மாநகரசபை மேயர் திரு. இரா. அம்பலவாணர் இந்துசமய அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின்பு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. நடராஜமுதலி தலைமை வகித்தார்.

திரு. அம்பலவாணர் தமது உரையில் கூறியதாவது:-

வெயில் என்றிருந்தால் நிழல் ஒன்று வரும். துன்பம் இருந்தால் இன்பம் வந்தே தீரும்.

பிறமதத்தவர்கள் எமது வறுமை, அறியாமை கண்டு நம் மதத்தவர்களை அபகரிக்க முயற்சி செய்கிறார்கள்.

ஆசை, மோகம், ஆகிய மாயைகளில் மயங்கி மதம் மாறும் சைவ சமயத்தவர்களிடையே நாம் உணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் இதனைத் தடை செய்ய முடியும். இப்படி அவர் கூறினார்.

சங்கத் தலைவராக தெரிவில் தலைவராக திரு. இரா. அம்பலவாணர் செயலாளராக திரு. வி. த. குமாரசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### நன்றி

ஒரு இயக்கத்தினால் கடந்த வாரம் 5 சிறி 24 மிட்சுபிசி ஜீப்பை மீட்டுத் தந்த இன்னொரு புனித இயக்கத்திற்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறோம். ஊழியர்கள், தென்னந் தோட்டம் கள், பளை

### நன்றி

86-3-86 இல் திகதி அன்று எமது இல்லத்தில் இருந்து இனந்தெரியாத சில இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட 10ஸ்ரீ 908 இலக்க மோட்டார் வண்டியை மீட்டுத் தந்த புனித இயக்கத்துக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். க. பத்மநாதன், நல்லூர்.

### வைத்தியம்

உங்கள் வியாதிகள் இன்னும் தீரவில்லையா? நரம்புத்தளர்ச்சி, ஆண், பெண் இருபாலாருக்குமான வியாதிகள், வெள்ளை, உடல் மெலிவு, ஸ்கலிதம், நாள்பட்ட எந்த வியாதியானாலும் இரகசிய வியாதிகள் எதுவானாலும் ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியர்களின் கூட்டு ஆலோசனைப் பெற முத்திரையுடன் விலாசமிடப்பட்ட கவர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள். வைத்திய ஆலோசகர்கள், 173, கிராண்ட் வீதி, யாழ்ப்பாணம்.


## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஜேர்மன்
- பிரான்ஸ்
- டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா, பொன்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய்.

குறிப்பு:

ஜேர்மன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு முற்பணம், பாஸ்போட் தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.


## முதல்வர் எம் ஜி ஆருக்கு இவர் நன்றி கூறுகிறார்

டைரக்ஷன், தயாரிப்பு, விநியோகம் என்று முக்கியத் துறைகளில் எல்லாம் முத்திரை பதித்து இருப்பவர் சித்ரமஹால் கிருஷ்ணமூர்த்தி

பதினெட்டு ஆண்டுகளாக தமிழ்த் திரையுலகிற்கு எத்தனையோ நன்மைகளை ஏற்படுத்தி, பல சாதனைகளைப் புரிந்திருப்பவர் இவர்

தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியின் முதல்வராக இவர் தமிழக அரசால் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

பாரபட்சம் இன்றி அனைவரையும் அன்புடன் அரவணைத்து பழகும் பண்பாளர் இவர்.

### தினசரி சினிமா

அவர் சொல்கிறார்:

திரைப்படக் கல்லூரிக்கும் எனக்கும் ஏற்கனவே பல ஆண்டுகளாக பரிச்சயம் உண்டு இதுவரை நான்கு முறை அங்கு செலக்ஷன் கமிட்டி உறுப்பினராகப் பணியாற்றி உள்ளேன்.

அதனால் என்னை நம்பி முக்கியமான பொறுப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். என்னுடைய மட்டும் திறம்பட பணியாற்றி இந்தக் கல்லூரிக்கும் பதவிக்கும் இயன்ற பெருமைகளைத் தேடித் தருவேன்.

எனக்கு இவ்வளவு பெரிய பதவியைக் கொடுத்து கௌரவித்த மாண்புமிகு முதலமைச்சர் எம் ஜி. ஆர். அவர்களுக்கும் அமைச்சர் ஆர். எம். வீரப்பனுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய அனுபவங்கள் எல்லா விதத்திலும் இந்தக் கல்லூரிக்கு பயன்படும் என நினைக்கிறேன்.

நான் திரையுலகில் தயாரிப்பு, டைரக்ஷன், விநியோகம் என எல்லாத் துறைகளையும் கையாண்டிருக்கிறேன்.

இதன் மூலம் மக்களின் ரசனைகளைத் தெரிந்து வைத்திருக்கிறேன்.

எனது அனுபவங்கள் எல்லாம் திரைப்படக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் பயன்படும் என்று!

## ஜீ சி. ஈ
# உயர்தர வகுப்பு அனுமதி

### கல்விப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல மாணவர்களுக்கும் உயர்கல்வி வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். இதனைக் கவனத்தில் வைத்தே கடந்தவருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி. சி. ஈ (சாதாரண) தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான உயர்தர வகுப்பு அனுமதிகள் வழங்கப்படவேண்டும்.

கடந்த புதன்கிழமை யாழ் வேம்படி மகளிர் மகாவித்தியாலயத்தில் யாழ் மாவட்டபாடசாலை அதிபர்களைச் சந்தித்த வடமாநில கல்விப் பணிப்பாளர் இப்படிக் கருத்து வெளியிட்டார். அதேபோல உயர்தர வகுப்புகளைப் போதிக்கும் பாடசாலைகளும் அதிகரிக்கப் படவேண்டும்.

பாடசாலையில் மாணவர் அனுமதி பெறுவதற்கு உரிய காலத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். அவ்விதம் விண்ணப்பித்து அனுமதி பெறத்தவறும் மாணவர்கள் அதிபரின் சிபாரிசுடன் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொண்டால் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

அண்மையில் கல்வி அமைச்சினால் சுற்றுநிருபம் ஒன்று சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

மாணவர்களை உயர்தர வகுப்புகளுக்கு அனுமதி வழங்கும்பொழுது, அதே பாடசாலையில் க. பொ. த சாதாரணம் பயின்று தேர்ச்சிபெற்ற வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

அடுத்து அதேவட்டாரத்தில் உயர்தரவகுப்பு அற்ற பாடசாலைமாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

அடுத்ததாக அசம்பாவிதங்களால் இடம் பெயர்ந்தோர்க்கும் முன்னுரிமையளிக்கவேண்டும் அதன் பின்னரே ஏனைய மாணவர்களுக்கு அனுமதியளிக்கலாம்.

இப்படி அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது

இந்த சுற்று நிருபம் குறித்து கல்விப்பணிப் பாளர் அதிபர்களுக்கு விளக்கமளித்தார்.

# காவலூரில் தண்ணீர்த் திட்டம்

ஊர்காவற்றுறை, மே 14

ஊர்காவற்றுறை பட்டினசபை பகுதிக்கான தண்ணீர் விநியோகம் அடிக்கடி சீர்குலைந்து வருவதால் மக்கள் மெத்தும் சிரமப்படுகின்றார்கள்.

நாரந்தனையிலுள்ள மூன்று இறைகளிலிருந்து இயந்திரங்கள் மூலம் பெறப்படும் குடிநீர், மின்தடை காரணமாக பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது

கடந்த ஒருவார காலமாகத் தொடர்ச்சியாக இருந்துவரும் மின்தடையால் இப்பகுதி இருளில் மூழ்கியிருக்கின்றது. எனினும் இந்நீரவது இடைக்காலேனும் வழி செய்யுமாறு அரச அதிபரிடம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## மண்டைதீவில் ஆசிரியர் பற்றுக்குறை

மண்டைதீவு மே 14

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் நிலவி வரும் ஆசிரியர்கள் பற்றுக்குறையால் மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்கப்படுகின்றது

ஜீ. சி. ஈ சாதாரம் ஆகிய வகுப்புகளில் கற்று வரும் மாணவர்கள் ஆசிரியர்கள் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் பாவட்டக் கல்வி பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கத்துக்கு அனுப்பியுள்ளது.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், மே 14

வண்ணை — சாந்தயர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா சிறப்பாக நடத்தப்பட்டது

விசேஷ பூசையுடன் விழா ஆரம்பமாகியது. அதனை தொடர்ந்து உபந்நியாசம் இடம் பெற்றது.

"எண்பத்தோராண்டு காலம் சிவப்பணி செய்து முதிர்வடைந்த அப்பர் சுவாமிகள் வாழ்க்கையைப் பின்பற்றி நாங்களும் தொண்டுகள் செய்வதற்கு முன்வர வேண்டும்.

"அஞ்சா நெஞ்சம் படைத்தவராய் இடையறாத தொண்டினால் நமக்கு ஏற்பட்ட இன்னல்களை இலகுவாக நீக்கினார்.

இன்று எமக்கு ஏற்பட்டிருக்கும் பலவகையான இன்னல்களையும் போக்குவதற்கு இறைவன் தான் அருள் புரிய வேண்டும்" என தமது உரையில் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் குறிப்பிட்டார்.

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக 3கொத்தணி பாடசாலைகள்

### உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சியில் அமையும்

கிளிநொச்சி மே 14

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் மூன்று கொத்தணிப் பாடசாலை அமைப்புக்கள் உருவாக்கப்படும்

புதிய மூன்று அமைப்புக்களுடன் கிளிநொச்சியில் மொத்தம் ஏழு கொத்தணிப் பாடசாலைகள் இனிமேல் இயங்கும்.

புதியகொத்தணிப்பாடசாலைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் மேற்கொண்டு வருகிறார்.

கிளிநொச்சிக் கல்வி மாவட்டத்தில் கிளிநொச்சி அக்கராயன், பூநகரி, பளை ஆகிய இடங்களில் ஏற்கனவே நான்கு கொத்தணிக் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அவை தற்போது இயங்கி வருகின்றன.

அதேவேளை இம்மாதம் முதல் உருத்திரபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி ஆகிய இடங்களில் புதிதாக மூன்று கொத்தணி அமைப்புக்கள் உருவாக்கப்படும்.

உருத்திரபுரம் கொத்தணிக்கு கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயமும் வட்டக்கச்சிக் கொத்தணிக்கு வட்டக்கச்சி மகாவித்தியாலயமும் முரசுமோட்டைக் கொத்தணிக்கு முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயமும் மூலாதார பாடசாலைகளாக இருக்கும்.

கிளிநொச்சிமாவட்டத்தில் ஏழு கொத்தணி அமைப்புகளும் இயங்க ஆரம்பித்ததும் முழங்காவில் பகுதியிலுள்ளசுமார் பதினெட்டு பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் அனைத்தும் கொத்தணி அமைப்புக்குள் இயங்க ஆரம்பித்துவிடும்.

# நல்லூர் தொகுதி அகதிமுகாம்களை வழி நடத்த இணைப்புக்குழு

நல்லூர், மே.14

நல்லூர் தொகுதியில் உள்ள மூன்று அகதிகள் முகாம்களையும் நிர்வகிப்பது தொடர்பாக இணைப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் கடந்த திங்கள் மாலை நடைபெற்ற கூட்டத்தில் இப்படி முடிவு செய்யப்பட்டது

முன்னாள் கோப்பாய் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு கே. சிட்னர் இணைப்புக் குழுவுக்கு ஆலோசகராகஇருப்பார்.

நல்லூர் தொகுதியில் உள்ள சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், செல்வா இடம் பெயர்ந்தோர் நிலையம், சமூக அபிவிருத்திக் குழுவின் புனர்வாழ்வு நிலையம் ஆகிய மூன்று முகாம்களில் சுமார் 800 அகதிகள் தங்கியிருக்கின்றனர்.

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருக்கும் இந்த 800 அகதிகளுக்கும் தகுந்த உதவி வழங்குவது குறித்து ஆராயப்பட்டது

இனிமேல் முகாமில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களும் தனித்தனியாக தமது உணவுகளைத் தாமே சமையல் செய்ய வேண்டும் எனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

குடும்ப அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தமது சம்பளம், உதவியாக வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் ஆகியவை குறித்த சரியான கணக்குகளை அவர்கள் வைத்திருக்க வேண்டும்.

தினமும் முகாம்களுக்கு இரண்டு சமூக சேவை அதிகாரிகள் விஜயம் செய்து அகதிகளுக்குரிய வசதிகள் குறித்த விசேட கவனிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

நிறுத்தப்பட்டிருக்கும் உணவு முத்திரைகள் அடுத்த மாதம் முதல் வழங்க முயற்சிகள் எடுக்கப்படும்.

இப்படி கூட்டத்தில் முடிவாகியது.

# காட்டுப்புலம் கிராமம் அபிவிருத்திக் கிராமமாகத் தெரிவு

வட்டுக்கோட்டை, மே 14

யாழ் மாவட்ட விடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினரால் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு தோறும் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் ஒரு கிராமம் தெரிவு செய்யப்படவுள்ளது

இத்திட்டத்திற்கமைய வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அபிவிருத்தி செய்வதற்கு தொழுநோயாளர்கள் வசிக்கும் மிகப் பின்தங்கிய கிராமமான "காட்டுப்புலம்" கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரத்திலுள்ள மிகப் பின்தங்கிய கிராமமே காட்டுப்புலம் கிராமம். இக்கிராமத்திற்கு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் மேற்படி சபையினரால் குடிநீர் வசதி மின்சாரவசதி, வீட்டு வசதி, வீதி அமைப்பு ஆகிய பல்வேறு விதமான அபிவிருத்தி வேலைகள் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இக்கிராமத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் நீண்டகாலமாகத் தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# காவலூர் பகுதிக்கான புதிய வரைபடம்

### தயாரிக்க நடவடிக்கை

ஊர்காவற்றுறை, மே 14

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான புதிய வரைபடம் ஒன்று தயாரிக்கப்படுகின்றது.

இப்பிரிவிற்குள் அடங்கும் வீதிகள். குளங்கள், வாய்க்கால்கள், பொதுக் கிணறுகள் ஆகியவற்றைக் குறிக்கும் வரைபடத்தை தயாரிப்பதில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி அதிகாரி ஈடுபட்டுள்ளார்

இப்பிரதேச எல்லைக்குள் நடைபெறவுள்ள அபிவிருத்தி வேலைகளை விளக்குவதற்கும் தேவையானபோது போதிய நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும் இவ்வரைபடம் [illegible] எனவும் எதிர்பார்க்கப் [illegible]

# பொலீஸாரால் கைதானவர் எங்கே?

கல்முனை, மே 14

அம்பாறை மாவட்டத்திலுள்ள சென்றல் காம்ப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த பொன்னையா- சோமசுந்தரம் எங்கே?

அவரை தேடிக் கண்டு பிடிக்க முடியாத உறவினர்கள் பெரிதும் கவலையடைந்திருக்கிறார்கள்.

கடந்த இருமாதங்களுக்கு முன்னர் சென்றல் காம்ப் பகுதிக்கு நெல் அறுவடை செய்யச் [illegible] கைது செய்யப்பட்டதாக [illegible].

இவர் கைது செய்யப்பட்டு அம்பாறை கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக அவரது பெற்றோருக்கு பொலீஸாரால் அறிவிக்கப்பட்டது.

பெற்றோர் அம்பாறை மாவட்ட அரச அதிபரின் அனுமதியுடன் முகாமுக்குச் சென்றபோது அங்கு அவர் இல்லை எனப் பதில் வந்ததாம்.

ஏமாற்றமடைந்த பெற்றோர்கள் இது குறித்து அக்கரைப்பற்று பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

# என்னைச் சுட்டபின் வயோதிபரைச் சுட்டனர்

### இராமனூர் சமபவத்தில் காயம் அடைந்த இளைஞர் தகவல்

நல்லூர், மே 14

வீட்டுக்குள் நுழைந்த சிப்பாய்கள் என்னைச் சுட்டுவிட்டு அடுத்த வீட்டில் நின்ற வயோதிபரை சுட்டுக் கொன்றனர்.

கடந்த சனிக்கிழமை இராமனூர் என்ற இடத்தில் சிருடையினர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான வேலுப்பிள்ளை செல்வம் (25வயது) என்ற இளைஞர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவருக்கு கையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள இவர் மேலும் சொன்னதாவது

சம்பவதினம் இருநூறுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் இராமனூர் பாதை வழியாக வயல் வாசலில் சத்தம் வந்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது காலை எட்டுமணி இருக்கும் வீதியால் சென்றசிப்பாய்களில் மூவர் எமது வீட்டுக்குள் நுழைந்தனர்.

என்னிடம் இருந்த கார்ட்டை பார்த்து விட்டு அவர்கள் அதை தம்முடன் வைத்துக் கொண்டனர்.

இதற்கிடையில் வேறு சிப்பாய்கள் சிலர் எமது அடுத்த வீட்டுக்கு சென்றனர்.

அங்கிருந்த வயோதிபரை வெளியில் இழுத்து சுட்டனர்.

அந்த வயோதிபர் இரத்தம் பீறிட்ட நிலையில் அந்த இடத்திலேயே விழுந்து இறந்தார்.

பின்னர் என்னையும் சிப்பாய்கள் சுட்டனர்.

காலிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்ட நிலையில் நான் விழுந்தேன்

அதற்கு பின்னர் எனது சகோதரியான தாமரைச்செல்வியிடம் நான் இறந்து விட்டேனா? எனப் பார்க்கும் படி சொன்னார்கள்.

அவளும் என்னைப் பார்த்து நான் இறந்துவிட்டேன் என கூறினார். பின்னர் வீட்டில் இருந்த தளபாடங்களை அடித்துநொருக்கி விட்டு சிப்பாய்கள் வெளியேறிச் சென்றனர்.

இப்படி அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒரு தரமாவது உண்மையாகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்தவன் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. இடைவிடாது ஆண்டவனைப் பிரார்த்திப்பவன் அவன் அருளால் பிரேமபக்தியை அடைகிறான்.

-அன்னை சாரதாதேவி

உதயன்
இல 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
14 05 86
தொலைபேசி 24805 22073
த. பெ. 23

## கொழும்பில் சுவரொட்டிகள்

இனத்தைக் காப்பதற்கு சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். இவ்வாறு கோரும் சுவரொட்டிகள் கொழும்பு நகரெங்கும் ஒட்டப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

தென்னிலங்கையில் இனக்கலவரங்கள் மூளுவதற்கு முன்னர் இத்தகைய சுவரொட்டிகளே கட்டியம் கூறுவதுண்டு.

பழைய நிகழ்வுகளின் பின்னணிகளைப் புரட்டிப் பார்த்தால், சிங்களத் தீவிரவாதிகள் மட்டுமன்றி, பல அரசியல் பிரமுகர்களும் நாட்டில் நடந்த இனக் கலவரங்களுக்குத் தூண்டுகோலாக இருந்தனர் என்பது கண்கூடு.

இப்போதும் அப்படியொரு தூண்டுதலின் பேரில் தான் சிங்கள மக்களை ஒன்றுபடக் கோரும் சுவரொட்டிகள் முளைத்தனவோ என்று எவரும் சந்தேகப்படுவது இயல்பு.

சுவரொட்டிகள் மட்டுமன்றி, அரசாங்க, தனியார் அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களை, உத்தியோகஸ்தர்களை அவமானப் படுத்துதல், கிண்டல் செய்தல் ஆகிய கலவர முற்சாயல்களும் தலைநகரில் ஆரம்பித்து விட்டன.

கடந்த வாரம் குண்டு வெடிப்பு இடம்பெற்ற மத்திய தந்திக் கந்தோரிலே கடமைக்குச் சென்ற தமிழ் ஊழியர்கள் அவமானப் படுத்தப்பட்டது அதற்கு ஓர் உதாரணம்.

கட்டுநாயக்காவில் விமானம் தகர்க்கப்பட்டது, மத்திய தந்திக் கந்தோர் குண்டு வெடிப்பு ஆகியன சிங்கள மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும், மனக் கசப்பையும் தோற்றுவித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த இரண்டு சம்பவங்களிலும் ஒன்றும் அறியாத அப்பாவி வெளிநாட்டாரும், அரச ஊழியரும், பொது மக்களும் அநியாயமாக உயிரிழந்துள்ளார்கள்.

ஆகையால் அச்சம்பவங்கள் வடக்கு, கிழக்கில் ஆயுதப்படையினர் உயிரிழக்கும் போது ஏற்படும் பதற்றத்தைவிட சிங்கள மக்கள் மத்தியில் அதிக பதற்றத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதும் உண்மையே.

அத்தகைய தாக்கத்தினதும், பதற்றத்தினதும் வெளிப்பாடாகவும் சுவரொட்டிகள் முளைத்திருக்கலாம். அதற்காகப் பழி ஓர் இடமிருக்க பாவத்தை வேறொரு இடத்தில் சேர்க்கலாமா?

தமிழ்த் தீவிரவாதிகள் சிங்கள மக்களை ஆத்திரமூட்டி, மீண்டும் "1983 ஜூலைகளை" உருவாக்க நினைக்கிறார்கள். ஆனால் அதற்கு அரசும், சிங்கள மக்களும் இடம் கொடுக்க மாட்டார்கள். தென்னிலங்கையில் பெரும்பான்மைச் சமூக மக்கள் மத்தியில் வாழும் தமிழர்கள், வடக்கு கிழக்கில் வாழும் மக்களைவிட நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ்கிறார்கள். இவ்வாறு பகிரங்க மேடைகளில் பெருமை அடித்து வந்த பாதுகாப்பு அமைச்சர் இப்போது என்ன சொல்லப்போகிறார்? செய்யப் போகிறார்?

தென்னிலங்கையில் மீண்டும் ஓர் இனக் கலவரம் வராது தடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா? அல்லது நாம் என்ன செய்வது, தமிழ்த் தீவிரவாதிகள் அளவுக்கு அதிகமாகச் சிங்கள மக்களை ஆத்திரமூட்டி விட்டனர் அதனால் நிலைமை கட்டுக்கடங்காது போய்விட்டது என்று பின்னர் காரணம் காட்டுவாரா?

## உணவு முத்திரைக்கு நல்ல அரிசி வழங்குக

### வேலணைப்பகுதியில் கோரிக்கை

வேலணை, மே 14

வேலணை ப.நோ.கூ. சங்கத்தால் பலகாலமாக உணவு முத்திரைகளுக்கு பச்சை அரிசியே வழங்கப்பட்டு வருகிறது. அதை மாற்றி உள்நாட்டு சிவப்பு அரிசியை வழங்குமாறு வேலணை மேற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கச் செயலர் திரு. சி. கந்தசாமி கோரியுள்ளார்.

வேலணை ப.நோ.கூ. சங்கத் தலைவருக்கு திரு. கந்தசாமி அனுப்பிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் செய்யும் மக்களுக்கு அரசால் கொடுக்கப்பட்ட உணவு முத்திரை விசேஷ முத்திரை போன்றவற்றிற்கு வேலணை ப.நோ.கூ. சங்கம் பச்சை அரிசியைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. பல காலமாக அப்பகுதி நகர் மக்கள் இதே உணவை உட்கொள்வதால் சலிப்படைந்துள்ளனர். தவிர வயிற்றுளைச்சல் வாந்திபேதி போன்ற நோய்களுக்கும் அஜீரணக்குறைவுக்கும் ஆளாகின்றனர். எனவே மாற்று நடவடிக்கையாக உள்நாட்டு அரிசி வழங்க ஆவன செய்யவும்.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபருக்கும், யாழ் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

### கரவெட்டியில் தையல் வகுப்புக்கள்

உடுப்பிட்டி, மே 14

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தையல் பயிற்சி வகுப்பு விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கல்லூரி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவிகளுக்கென ஆரம்பிக்கப்படும் தையல் வகுப்பு சனி ஞாயிறு தினங்களில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போபால் விபத்து நட்ட ஈடு விவகாரம்

# இந்திய நீதி மன்றமே தீர்மானிக்கலாம்

### அமெரிக்க பெடரல் நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவிப்பு

வாஷிங்டன், மே 13

போபால் யூனியன் கார்பய்ப் தொழிற்சாலை விபத்து நஷ்ட ஈடு தொடர்பான சட்ட ரீதியான கோரிக்கைகளை இந்திய நீதி மன்றமே தீர்மானிக்க முடியும்.

இவ்வாறு அமெரிக்க நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

அமெரிக்க பெடரல் நீதிமன்றத்தில் 100 கோடி அமெரிக்க டாலர் நட்டஈடு கோரி இந்திய தரப்பில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணையிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நீதிபதி ஜோன் எப். கீனன் தமது தீர்ப்பில் மேலும் தெரிவிக்கையில்,

போபால் விபத்து நட்ட ஈட்டு கோரிக்கை தொடர்பான விடயங்களைத் தீர்மானிக்கக் கூடிய தகுதி இந்திய நீதிமன்றத்துக்கு உண்டு.

இந்த விசாரணைகள் தொடர்பாக இந்திய நீதி மன்றத்தின் நிபந்தனைகளுக்கு யூனியன் கார்பய்ட் நிறுவனம் இணங்கியே போகவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தெ. ஆபிரிக்க கறுப்பர் மீது பொலீஸ் சூடு

சுவாட்டோ, மே 13

தெ. ஆபிரிக்காவில் கறுப்பு இனத்தைச் சேர்ந்த 3 பேரை பொலீசார் சுட்டுக்கொன்றுள்ளனர்.

கறுப்பர்கள் வாழும் பகுதியான சுவாட்டோ என்ற இடத்திலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பொலீசார் சென்ற வாகனத்தின் மீது கற்களை வீசியபோது பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அரசு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## ரஷ்ய தொலைக்காட்சியில் செர்னோபில் அணு உலை விபத்து

### 6 பேர் மரணம் 35 பேர் காயம்

### 150 பேருக்கு பாதிப்பு என அறிவிப்பு

மொஸ்கோ, மே 13

ரஷ்யாவின் செர்னோபில் அணு உலை விபத்தில் 6பேர் இறந்துள்ளனர்.

ரஷ்ய தொலைக்காட்சி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

எரிகாயங்களினாலும் கதிர் வீச்சு பாதிப்பினாலும் இந்த மரணங்கள் நேர்ந்ததாக அந்த தொலைக்காட்சிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தினால் 35 பேர் கடுமையான காயங்களுக்கு உட்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

150 பேருக்குக் கூடுதலானவர்கள் கதிர்வீச்சுத் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர்.

விபத்திடத்தைச் சுற்றி 35 கி. மீட்டர் வரையான பிரதேசம் ஆபத்து வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் கதிர்வீச்சு அபாயம் குறிப்பிடக் கூடிய அளவுக்குக் குறைந்து விட்டது.

உக்ரேன் பகுதிகளில் இடைநிறுத்தப்பட்டிருந்த உணவு தானிய உற்பத்திச் செய்கைகள் மீண்டும் தலைக்கப்பட்டுள்ளன.

செர்னோபில் விபத்துக் காலத்தில் பொறுப்பில்லாது நடந்த கொண்டார்கள் என்றகுற்றச் சாட்டில் உக்ரேனின் பகுதியில் உள்ள 3பொம் யூனிக் தலைவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கிறது.

இவ்வாறு ரஷ்ய தொலைக் காட்சிச் செய்தியில் மேலும் விபரங்கள் வெளியிடப்பட்டன.

### சிரியா உத்தரவு

டமாஸ்கஸ், மே 13

பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் 3 பேரை சிரியா வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது.

சிரியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதுவரை அழைத்து இந்த உத்தரவை அரசு அறிவித்துள்ளது.

7 நாட்களுக்குள் இந்த 3 இராஜதந்திரிகளும் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் எனவும் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

சிரிய இராஜதந்திரிகள் 3 பேரை பிரிட்டன் வெளியேற்றியதற்குப் பதில் நடவடிக்கையாகவே சிரியா இவ்வாறு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வெளி உலகில்

## ஐக்கியம் எம்மிடம் இருந்தால் அந்நிய ஆதிக்கமும் அடங்கும்

### பாரத ஜனாதிபதி கூறுகிறார்

சென்னை, மே 13

பாரத நாட்டவர் அனைவரும் ஐக்கியமாக இருந்துவிட்டால் எந்த அந்நிய ஆதிக்கமும் எம்மை எதுவும் செய்துவிட முடியாது.

இவ்வாறு பாரத ஜனாதிபதி கியானி செயில்சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் பஞ்சாப் தொழில் உறவு பொன் விழா சங்க மண்டபத்தில் உரையாற்றும் போதே மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் வாழும் அனைவருமே இந்த மண்ணின் மைந்தர்கள் தான். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற பேதங்கள் எதுவும் இருக்கத் தேவை இல்லை.

சீக்கியர்கள் பாரதத்தின் பல இடங்களிலும் சென்று வாழ்கிறார்கள்.

தமிழ்நாட்டிலும் கல்வி வேலைவாய்ப்பு வசதியளிக்கும் 80க்கு மேற்பட்ட நிறுவனங்களை வைத்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டவரும் இவ்வாறு தமது தொழில் வளங்களைப் பெருக்கியும் வேறு பகுதிகளிலும் தமது நிறுவனங்களை அமைத்தும் பணிகளை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கல்வித்துறைக்கும் தொழில்வளத் துறைக்கும் பணியாற்றியதற்காக தமிழ்நாட்டின் அவ்வத்துறை சார்ந்தவர்களையும் ஜனாதிபதி பாராட்டினார்.

தேரரின் வடபகுதி அனுபவங்கள்:

## அப்பாவிகள் துன்புறுத்தப்படவே பிரச்சினை மோசமானது

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக இருந்தவர் வண தெல்கெல்ல பதும சிரி தேரர்.

'யாழ்ப்பாணத்தில் என் அனுபவங்கள்' — என்ற தலைப்பில் அவர் சிங்களத்தில் எழுதிய புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சற்றடே ரிவியூ' ஆங்கில வார இதழில் பிரசுரமானது.

அதன் தமிழ் மொழி பெயர்ப்பின் 9ஆவது பகுதி இன்று பிரசுரமாகிறது.

எப்படி இருந்தும் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழர் தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டு வந்தனர்; அநீதியான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர். இது குறைவதாக இல்லை; அதிகரித்துக்கொண்டே வந்தது.

இதனால் தமிழ் இளைஞரும், தமிழ் இளைஞர் அமைப்புக்களும் பொறுமையின் எல்லைக்குச் சென்றன. அவர்களின் ஆக்ரோஷம் வடபகுதியில் உள்ள சிங்களவர் உணரத் தொடங்கினர்.

3-12-84இல் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இருந்த தண்ணீர் ரயில் ஒன்று புறப்பட்டது.

இதில் 60 சிங்களத் தொழிலாளர்களை வாருங்குப் போகப் புறப்பட்டனர்.

... கொண்டு செல்லப்பட்டனர், பலர் ஆதரவற்றவர்களாயினர்.

ஒரு தமிழ் அமைப்பு 8 இளைஞர்களையும் ஒரு வயோதிபரையும் கடத்திச் சென்றது.

கடத்தப்பட்டவர்களில் ஒருவன் நான் நேசித்த சிறுவன். குழந்தைப் பருவம் முதல் அவன் என்னுடன் வசித்து வந்தான்.

ஆயுதமில்லாத அப்பாவியான இவர்களுக்கு நடந்த விஷயம் பற்றி அதிர்ச்சி அடைந்தேன்.

நானும் ஏனைய சிங்களவரும் வடபகுதியில் குடியிருப்பதை விட்டு வெளியேறினோம்.

இச்சம்பவம் எனக்கு மிகுந்த மனவேதனையைத் தந்தது. இது பற்றி எனக்கு நெருங்கியவரான வண பிதா ஜேஹன் தேவநேசனுக்கு அறிவித்தேன். அவர்களை விடுவிக்கும்படி அவர்மூலம் வேண்டுகோள் விடுத்தோம். இவ் வேண்டுகோளை நாளிதழ்கள், சஞ்சிகைகள் மூலம் விட்டோம்.

கடத்தப்பட்டவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்களா? என்பது எனக்கு அதிசயமாகத்தான் உள்ளது.

உண்மையில் எமது வேண்டுகோளைப்போல அது இருந்தால் கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பர்.

நான் என்றும் நீதியாயத்துடன் நடப்பவன். வடபகுதித் தமிழர், தமிழ்ப்போராளிகள் நான் எவரைக்கும் துன்புறுத்தப் படமாட்டேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

'திஸ்ஸவிகாரை பிக்கு உண்மையானவர், நீதி ...

பல தடவை முயற்சித்தேன். எனக்கு ஒருவரும் ஏற்படாது என்ற திடநம்பிக்கை இருந்தது.

மூன்று தடவை ஆயுதப்படையினர் என்னைக் காங்கேசன்துறைக்குப் போகவேண்டாம் என்று தடுத்தனர்.

10-6-1985 இல் நான் எனது முயற்சியில் வெற்றி கண்டேன். அன்றைய தினம் தமிழர் உரையைச் சந்தித்தேன். நான் இல்லாதநேரத்தில் விகாரையில் இருந்த சில பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. அதுதான் ஒரு இழப்பு.

"சுவாமி! நீங்கள் இல்லாதது எங்களுக்குப் பெரிய இழப்பு. என்ன இருந்தாலும் நீங்கள் இப்போது வரவேண்டாம். பிரதமர் ராஜீவ் காந்தியுடன் நடத்தும் பேச்சுக்கள் வெற்றி அளிக்கும். அதனால் சமாதானமும் அமைதியும் நிலவும் இப்படி நாம் நம்புகிறோம். அதன்பின்னர் வாருங்கள்" — இப்படி நான் சந்தித்த தமிழர்கள் தெரிவித்தனர்.

வடபகுதியில் முன்னர் சமாதானமாக வசித்த சிங்களவர்கள் மீண்டும் அங்குசென்று அமைதியாகவே வாழ விரும்புகின்றனர்.

அங்குள்ள சூழ்நிலை அதற்கு உகந்ததாக இல்லை. பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகளே இதற்குக் காரணம். அதிகாரத்தைப் பிடிப்பதற்காக தமிழச் சிங்களவருக்கு எதிராகவும், சிங்களவரைத் தமிழருக்கு எதிராகவும் அவர்கள் தூண்டிவிடுகின்றனர்.

இனபேதத்தை இந்த அரசியல்வாதிகள் வளர்க்காமல் இருந்திருப்பார்களாயின், தமிழர்—சிங்களவர் நல்லுறவு இப்படி வீழ்ச்சி அடைந்திருக்க முடியாது.

தமிழர் அவர்கள் பிறந்த மண்ணான யாழ்ப்பாணத்திலேயே சுதந்திரமாக நடமாட முடியாது என்றால், தமிழர் அதைச் சகிப்பார்களா? தங்கள் உயிர்களைக்காப்பாற்றவே கொழும்பை விட்டு தமிழர் யாழ்ப்பாணம் சென்றனர்.

யாழ்ப்பாணத்திலும் தங்கள் உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை என்றால், அது அவர்களால் பொறுக்கக்கூடிய காரியமா?

தேவையின்றி அப்பாவிகள் துன்புறுத்தப்படத் தொடங்கியதில் இருந்து தான் பிரச்சினை மோசமானது.

"தவறு விடுபவர்களைத் தண்டியுங்கள்; மற்றவர்களை விட்டுவிடுங்கள்" — இதுதான் தமிழர் கூறுவது.

### இறைச்சிக்கடை அகற்றப்பட்டது

சாவகச்சேரி, மே 14

மட்டுவில் சிவன் கோவில் முன் ஆரம்பிக்கப்பட்ட மாட்டிறைச்சிக் கடை இரவோடிரவாக அவ்விடத்தை விட்டு அகற்றப்பட்டுவிட்டது.

கிராமத்தில் உள்ள இந்து இளைஞர்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையே இதற்குக் காரணம் ஆகும்.

## மயிலிட்டியில் துப்பாக்கிச் சூட்டுக்கு தொழிலாளி பலி

உடுவில், மே 14

சைக்கிளில் வந்த தொழிலாளி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த சூட்டுச் சம்பவத்தில் மரணமானவர் பலாலியைச் சேர்ந்த திரு. முருகேசு வேலாயுதம் வயது 38.

மயிலிட்டிச் சந்தியால் தனது வீடு நோக்கி சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வைத்து சிறுவர் இவரைச் சுட்டதாகச் சொல்லப்படுகிறது.

இவரது மரணத்தால் மயிலிட்டியில் ஞாயிறு முழுவதும் பதற்றநிலை காணப்பட்டது.

சமய சந்நிதிகளில்

### வைகாசி படிப்பு

பருத்தித்துறை, மே 14

புலோலி தெற்கு மந்திகை கண்ணகை அம்பாள் ஆலய வைகாசிப் படிப்பு இம்மாதம் 19-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்யாணப் படிப்பும், சனிக்கிழமை மாதர் கூத்தும் 26 ஆம் திங்கட்கிழமை சிலம்பு கூறலும் நடைபெறும். 27ஆம் திகதி வருடாந்த பொங்கல் விழாவும் மறுநாள் புதன்கிழமை குளிர்த்தியும் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

### கொக்குவிலில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 14

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

22ஆம், 23ஆம் திகதிகளில் தேர், தீர்த்தம் நடைபெறும்.

### நாவற்குழியில் ஷெல் தாக்குதல்

நல்லூர், மே 14

ஞாயிற்றுக்கிழமை இரவு நாவற்குழியில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் நாவற்குழி முகாமில் இருந்த சிப்பாய்கள் வெளியேற முயற்சித்தனர்.

அப்பொழுது போராளிகள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

இதனால் முகாமிற்குத் திரும்பிய சிப்பாய்கள் "ஷெல்" தாக்குதலை மேற்கொண்டனர்.

### போராளிகளுக்கு அஞ்சலி

மட்டக்களப்பு, மே 14

ஒரு மாதத்திற்கு முன்னர் மட்டக்களப்பு கரவெட்டி மோதலில் பலியான லெப்டினன் புவிராஜ் (உதயதாசன்) நாவற்குடாவில் பலியான சுகுணரன் (தூர்த்தி) ஆகிய இரண்டு போராளிகளுக்கும் மட்டக்களப்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இந்த இருவருக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் மடுகரில் ஞாயிறு இரவு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன; சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.



**பொய்யாமொழி**

குறள்:

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பொருள்:

தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்கும் நிலம் போல, தம்மை இகழ்வாரை யும் பொறுப்பதே தலையான பண்பாகும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

...சதி
...நர சேவை
(எல்லா நாட்களும்)
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
Tele: 24791, 24886



# உதயன்

14 05 1986 புதன்கிழமை



வெளிநாட்டுப் பிரயாணம்
* துரித ஒழுங்குகள்
* சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
* Confirmations, Re-confirmations-
* பாஸ்போட் விசா, பெர்மிட்
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886


# ஆசிரியர்கள்
# கல்விக் கந்தோர்
# செல்லக் கட்டுப்பாடு

## யாழ். கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் சுற்றுநிருபம்

பலாலி, மே 14

யாழ் கல்வித் திணைக்களத்திற்குள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகாயிய மாக நடமாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய நடவடிக்கையை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பான விதிகளை ஒரு சுற்று நிருபம் மூலமாக அவர் அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

* ஆசிரியர்களின் முறைப்பாடுகள் யாவும் எழுத்து மூலமாக அனுப்பப்பட வேண்டும். முறைப்பாடுகளை தமக்கு மேல் நிலையிலுள்ள உத்தியோகத்தர் ஊடாக அனுப்ப வேண்டும்.

அதாவது ஆசிரியர்கள் அதிபர் மூலமும் அதிபர்கள் வட்டாரக் கல்வி அதிகாரி மூலமும்.

* இவ்வாறு திணைக்களத்தில் பதிவுசெய்யப்படும் முறைப்பாடுகளுக்கு ஒவ்வொரு குறியீட்டு எண் வழங்கப்படும். அந்த குறியீட்டு எண் சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுக்காரருக்கும் அனுப்பி வைக்கப்படும். தொடரும் நடவடிக்கைகளுக்கு அவ்வெண்ணைக் குறிப்பிட்டு, கல்விப்பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டு வரவேண்டும்.

* தத்தமது பாடசாலை அதிபரின் உத்தரவுக் கடிதம் இன்றி, ஊழியர்கள், ஆசிரியர்கள் திணைக்களத்துக்கு வர முடியாது.

* பாடசாலை நேரங்களில் வருவது தவிர்க்கப்படவேண்டும்.

* திணைக்கள உத்தியோகத்தர்களை அவசியமான விடயத்தின் பொருட்டு சந்திக்க விரும்புகிறவர்கள், பிரதி திங்கள் கிழமை தோறும் பி. ப 1-30 மணிக்கும் 4-00 மணிக்கும் இடையில் சந்திக்கலாம். இவ்வாறு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்குமான அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க தாபகக் குழுக்களுக்கான சுற்று நிருபத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

* தலைவர், செயலாளர்களின் கையெழுத்துடன் கூடிய விண்ணப்பங்கள் நேரம், திகதி, சந்திப்போர் பெயர்கள் போன்ற விபரங்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

* சந்திப்புக்களின் போது தலைவர் (அதிபர்) செயலாளர் என்போர் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும்.

* அபிவிருத்திச் சங்கத்தாபகக்குழு பாடசாலை அபிவிருத்தி பற்றி மட்டுமே உரையாட வேண்டும். பாடசாலை உள்ளக நிருவாகத்தில் தலையிடக் கூடாது.

# தேச வழமைச் சட்டம்
## பெண்ணுரிமையைப் பறிக்கிறது
### பங்குக் காணிகளை விற்பதில்தான் காட்டுப்பாடு
### சபையில் ரத்கம எம்.பி

கொழும்பு, மே 14

இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பெண்கள் அனுபவிக்கும் உரிமைகளை தமிழ்ப் பெண்கள் அனுபவிக்க முடியாதபடி தேசவழமைச் சட்டம் தடுக்கிறது.

இப்படி ரத்கமயு எம். பி எம் பி. திரு அபேசேகர சோமரத்தின சொன்னார்.

தேசவழமைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று பொலன்னறுவை எம்.பி.சுனில் சந்திர ஜயக்கொடி கொண்டு வந்த தனிநபர் பிரேரணை மீது கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது.

அந்த விவாதத்தில் பங்குபற்றிப் பேசுகையில் திரு. சோமரத்தின மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. சோமரத்தின மேலும் சொன்னதாவது:

தேசவழமைச் சட்டம் பாரபட்சமானது. எந்தச் சட்டமும் தற்போது நிலவும் நிலைமையை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தேச வழமைச் சட்டத்தின் கீழ் தமிழ்ப் பெண்களுக்குச் சமத்துவம் இல்லை. இலங்கையின் ஏனைய பகுதிகளில் பெண்கள் அனுபவிக்கும் உரிமைகள் தமிழ்ப் பெண்களுக்குக் கிடையாது.

நாட்டின் ஏனைய பகுதியில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் காணிவாங்க முடியாது என்று கூறப்பட்டது. அப்படி காணிகளைப் பெறுவதை தேசவழமைச் சட்டம் தடுக்கிறது என்றும் கூறப்பட்டது. உண்மை நிலை அதுவல்ல.

பங்குக் காணிகளுக்குத்தான் இக்கட்டுப்பாடு. இப்படியான காணிகள் அடுத்த பங்காளிக்குத்தான் விற்கப்பட வேண்டும். அல்லது பங்காளியின் வாரிசுக்குத்தான் விற்கப்படவேண்டும். இதைத்தான் தேசவழமைச் சட்டம் கூறுகிறது.

பங்குக்காணி அல்லாத காணியை அதன் உரிமையாளர் நாட்டின் எந்தப் பகுதியில் உள்ளவருக்கும் விற்கமுடியும்.

பிரபுத்துவ முறை யாழ்ப்பாணத்தில் வேரூன்றி விட்டது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் பெண்கள் காணிகளை வாங்கவும் விற்கவும் உரிமையுண்டு.

இப்படி திரு. சோமரத்தின சொன்னார்.

இக்கட்டத்தில் நாடாளுமன்றம் மே 20 வரை ஒத்திவைக்கப்பட்டது.

## இந்திய இராணுவ . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமீப நாட்களில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

பேச்சுவார்த்தையை இடை நிறுத்தி தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்களை அது தாவியுக்கள்.

பேச்சுவார்த்தை என்ற போர்வையில் தமிழர்களை கொன்றொழித்திற்கு கொண்டுபோக இலங்கை அரசு தயாராகிக் கொண்டு விட்டது. அவர்களுக்கு உறுதுணையாக வெளிநாட்டு சக்திகளும் சேர்ந்துள்ளன.

மௌனம் சாதிக்கும் ஒவ்வொரு நிமிடமும்- இந்திக்கும் ஒவ்வொரு நிமிடமும்-மிகவும் பெறுமதியானவை.

மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசிடம் நேரடி விளக்கம் கேட்க வேண்டும்.

இலங்கையின் வடக்கு கிழக்கு பாகாணங்களில் உள்ள ஆயுதப் படை முகாம்களுக்கு தங்கள் விசேட தூதரையும், இந்திய உயர் இராணுவ அதிகாரிகளையும் நேரில் அனுப்பி அங்குள்ள நடவடிக்கைகள் குறித்து அறிய வேண்டும்.

இந்திய கடல்பகுதியில் வெளிநாட்டுக் கப்பல்கள் வருவதை முற்று தடை செய்ய வேண்டும்.

இப்படி அந்தத் தந்தியில் கேட்கப்பட்டிருக்கிறது.

## இலங்கை இஸ்ர. .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளது.

16 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் இஸ்ரவேலின் வர்த்தகத்துக் குழு ஒன்று இலங்கை வருவது இதுவே முதல் தடவை.

இஸ்ரவேல், இலங்கையிடமிருந்து தேயிலை, றப்பர், தேங்காய் ஆகியவற்றை ஏற்றுமதி செய்துள்ளது.

1 கோடி 50 லட்சம் கிலோ தேயிலை, 1கோடி 50லட்சம் கிலோ றப்பர் ஆகியவற்றையும் 50லட்சம் கிலோ பெறுமதியான ஏனைய பொருள்களையும் இஸ்ரவேல் வரை இலங்கையிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

வெளியிட்ட திகதி: 14-05-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15, Second Lane, Power Houes Road, Jaffna

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka, under number Q J 60 N86


## யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை அறிக்கை

யாழ்ப்பாணம், மே 14

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை "வருமுன் காப்போம்" என்ற தலைப்பில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

இதுவரை காலமும் எமது போராட்டச் சூழலில் ஆயுதப்படைகளுடனான மோதலில், தம்மையே முழுமையாக விடுதலைக்காக அர்ப்பணித்த எத்தனையோ போராளிகளை இழந்திருக்கிறோம்.

இவர்களை அழித்த இராணுவத்தை தமிழீழப் பகுதியில் நிலைகொள்ள வைப்பதற்காக அரசாங்கம் நாளொன்றுக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாவை செலவு செய்து வருகிறது.

ஆனால் சமீபத்தில் ஒரு ஸ்தாபனம் மீது இன்னுமொரு ஸ்தாபனம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மிக அதிகமான போராளிகளை நாங்கள் இழந்தது ஆழ்ந்த கவலை அளிக்கிறது.

இந்த நடவடிக்கைகளின் போது, இந்தப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து, எமது மக்களின் நல்வாழ்விற்காக தம்மைத் தியாகம் செய்த பல போராளிகளை இழந்தனோம்.

தலைமைகளின் திசை விலகல்களுக்கெதிராக ஸ்தாபனத்துக்குள்ளேயே போராடியிருக்கக்கூடிய பல போராளிகளை —

எமது காலிலேயே தங்கி நின்று எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பதில் கருத்தாயிருந்த பல போராளிகளை —

ஏன் கொல்லப்படுகிறோம் என்பதையே அறிய முடியாமல் இறந்து போன பல போராளிகளை — நாம் இழந்தது துரதிஷ்டவசமானது.

தமது இலட்சியங்களின் பலனை முழுமையாக அடைய முடியாது மரித்துப்போன இந்த விடுதலைப் போராளிகளுக்கும், இடைநடுவில் அகப்பட்டு இறந்து போன பொதுமக்களுக்கும், நாவாந்துறையில் இறந்த பொதுமக்களுக்கும் நீர்மலர்களும் விழிநீர்களும் எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கிறோம்.

பொதுமக்களே! விடுதலை ஸ்தாபனங்களே! வெகுஜன ஸ்தாபனங்களே! எதிர்காலத்தில் இத்தகைய இழப்புக்களைத் தவிர்ப்பதற்கும்—

தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்தியாவின் ஆதிக்கமின்றி அதன் உதவியுடன் வென்றெடுப்பதற்கும் -

முழுமையான விடுதலைப் பாதையை நோக்கி முன்னேறுவதற்கு- விடுதலை ஸ்தாபனங்கள் யாவற்றையும் ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படும்படி கோருவோம் தூண்டுவோம் நிர்ப்பந்திப்போம். அதற்காக முழுமையாக உழைப்போம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அப்பர் சிலை இன்று
### திருக்கேதீஸ்வரத்தில்

யாழ்ப்பாணம், மே 14

கடந்த ஜனவரியில் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் இருந்து புறப்பட்ட அப்பர் சுவாமிகள் திருவுருவச் சிலை திருக்கேதீஸ்வர கொடியேற்ற தினமான இன்று திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடையும்.

யாழ் இந்துக்கல்லூரி உபயத்தில் அமைக்கப்பட்ட இந்தச்சிலை வடக்கில் பல இடங்களிலும் ஊர்வலமாகச் சென்று கோயில்கள், பாடசாலைகளில் தரித்தபின்னர் திருக்கேதீஸ்வரம் நோக்கிப் புறப்பட்டது.

## ரூபவாஹினி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கங்களுக்கிடையே சந்தேகங்களை உருவாக்கி மோதவிடுவது — இதன் மூலம் தனது அழித்தொழிப்பு வேலையை இலகுவாக்குவது என்னும் திட்டத்துடன் தனது பிரச்சார சாதனங்கள் மூலம் பொய்களையும், புரட்டுகளையும் எதிரிகள் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

மக்கள் விழிப்போடும் தம்பிக்கையோடும் இருந்து, விடுதலை அமைப்புக்களுடன் ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழர்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னதாகத் தெரிகிறது.

இந்தியாவில் இருந்து திரு. டிக்ஸித் வந்த கையோடு கடந்த திங்கள் கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் விபரமாக வெளியானது தெரிந்ததே.

## ஜே ஆர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு அறிவித்தது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதிலும், ஐ.தே.க. அரசு இராணுவத்தீர்வு காணப் போவதாகக் கூறு கூறுகிறது பேச்சுக்கள் நடத்தும் சூழ்நிலை உருவாக்க ... சாவெளி அறிவித்தது

## கொழும்புச் சம்பவங்களுக்கு
# அரசின் கையாலாகத்தனமும் திறமையின்மையுமே காரணம்
## சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, மே 14

அண்மையில் கொழும்பில் நிகழ்ந்த சோக சம்பவங்கள் அரசாங்கத்தின் கையாலாகத் தனத்தையும் திறமையற்ற நிர்வாகத்தையும் காட்டுகின்றது.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார்.

நேற்று விடுத்த அறிக்கையில் திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியிருப்பதாவது:

இன்றைய அரசு 1977 இல் ஆட்சிக்கு வந்தது. ஆறு வருட காலம் நாட்டை ஆளவே மக்கள் ஆணை கொடுத்தனர்.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மேலும் புதிய காலத்தை இந்த அரசு நீடித்தது.

இது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய செயல்.

திம்பரம் குழு கொழும்பில் பேச்சுக்கள் நடத்தும் போது கட்டுநாயக்கா குண்டு வெடிச் சம்பவம் இடம் பெற்றது. திம்பரம் குழு போன பின்னர் தந்திக் கந்தோர் குண்டு வெடிப்பு ஏற்பட்டது.

இது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும்.

அரசின் கையாலாகாத் தனம், திறமையற்ற நிர்வாகம், ஊழல் ஆகியவற்றால்தான் இது நிகழ்கின்றது.

எந்தத்தீர்வும் மக்களின் அனுமதியைப் பெற்றே அமுல் நடத்தப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படவே ஆக வேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஓய்வூதிய தினங்கள்

யாழ்ப்பாணம், மே 14

கொக்குவில் தபால் நிலையம் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் ஏப்ரல்,மே மாதங்களுக்கான ஓய்வூதியத்தை மே 21ஆம் திகதி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தபால் நிலையம் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் மே 28ஆம் திகதி விளையாட்டரங்கில் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளும்படி யாழ் தபால் நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. இவர்களுக்கு மே 21ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கப்படுவதாக இருந்தது.

## திருமலையில் காரைநகர் மீனவர்கள்

நல்லூர், மே 14

காரைநகரைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் திருமலை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் புத்தாண்டு தினம் காரைநகர்ப் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற எஸ் குமாரகுமார் (வயது 37) வை நிசைவீரசிங்கம் (21 வயது) ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

கடந்த ஒருமாத காலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களை விடுதலை செய்யுமாறு காரைநகர் பிரசைகள் குழுவினர் திருமலை கடற்படை உயரதிகாரிகளைக் கேட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இது சம்பந்தமாக யாழ் அரசாங்க அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது.

## தேடுதல்

செங்கலடியில் படையினர் நேற்று ஆயுதப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

விசாரணைக்காக 15 பேர் வரையில் அழைத்துச் செல்லப்பட்டனர். மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

## களமுனை . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நடத்தி வந்தார். இந்த வாடியில் உள்ள மூன்று தமிழர் கைதான போது இவரும் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்.

சமான்டோர்கள் கல்முனை வரும் வழியில் பெரிய நீலாவணையிலும் 7 பேரைக் கைது செய்திருந்தனர்.

கைதானவர்களில் மூன்று இளைஞர்கள் கல்முனை கடற்கரையில் இறக்கி விடப்பட்டனர்.

இவர்களின் கண்கள் கறுப்புத் துணியால் கட்டப்பட்டு உடைகள் கழற்றப்பட்ட பின்னர் ஓடும்படி இவர்கள் பணிக்கப்பட்டனர் என்றும் ஓடும் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

## யாழ் நகரில் உள்ள
# 3 வர்த்தக நிறுவனங்கள் பூட்டப்பட்டுள்ளது பற்றி
## ஈ.பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், மே 14

யாழ் நகரில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளது பற்றி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் நகரிலுள்ள சோமசுந்தரம் அன் சன்ஸ், நாவல் ரேடர்ஸ், ஆச்சாரியோஸ் மோட்டோர்ஸ் ஆகிய வர்த்தக நிறுவனங்கள் தொடர்ந்து செயற்படுவது மக்கள் விடுதலைப் படையினால் நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

மேற்படி மூன்று வர்த்தக நிலையங்களும் திரு. சோமசுந்தரம் என்பவருக்குச் சொந்தமானவை. திரு சோமசுந்தரம் வேண்டாத நடவடிக்கையில் ஈடுபட்டது எம்மால் ஆதாரபூர்வமாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

திரு. சோமசுந்தரத்தின் நடவடிக்கைகள் தொடர்பான பூரண விபரங்களை நாம் சேகரித்துக்கொண்டிருந்த போது அவர் ஈழத்தை விட்டுத் தப்பியோடி விட்டார். இந்நிலையில் சோமசுந்தரம் இருக்கும் இடத்திற்குத் தகவல் கொடுத்து அவரை இங்கு வருமாறும் உயிருக்கு எவ்வித ஆபத்து ஏற்படாது எனவும் உறுதியளித்தோம்.

ஆனால் திரு சோமசுந்தரம் வரவில்லை. இந்நிலையில் திரு சோமசுந்தரம் எதிரிக்கு தகவல் கொடுத்ததை அறிந்திருந்த இருவர் எம்மால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இவர்கள் திரு சோமசுந்தரம் எதிரிக்குத் தகவல் கொடுத்ததை தாம் அறிந்திருந்தனர் என்பதை ஒப்புக்கொண்டனர் ... தகவல் கொடுக்காதது ... யும் ஏற்றுக்கொண்டு எம்மிடம் மன்னிப்புக் கோரினர்.

இவர்கள் தேசத்துரோக நடவடிக்கைக்கு துணைபோயிருந்தாலும் இவர்களின் குடும்பநிலைகாரணமாகவும் தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரியதாலும் இவர்களை எச்சரித்து விடுதலை செய்தோம்.

திரு. சோமசுந்தரம் குற்றவாளி என்று எம்மால் உறுதி செய்யப்பட்ட பின்னர் அவரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தோம். இச்சம்பவங்கள் தொடர்பாக மேற்படி வர்த்தக நிறுவன ஊழியர்களை அழைத்து நிலைமையைத் தெளிவுபடுத்தினோம். அவர்களும் இதற்கு உடன்பாடு தெரிவித்தனர்.

பொது ஸ்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றை தற்போதைய நிலையில் பாதுகாப்பது எமது கடமையே. ஆனால் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் தேசத்துரோகிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது தவறில்லை என்பதுடன் அவசியமானது என்றே கருதுகிறோம்.

எதிரியைவிட எம் மத்தியிலுள்ள தேசத் துரோகிகள் மிக ஆபத்தானவர்கள். இவர்களைப் பாதுகாக்க முனைவதோ இவர்கள் பற்றிய செய்திகளை மறைக்க முயல்வதோ விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்க அங்கீகாரமளிப்பதற்குச் சமமாகும். எனவே ஈழமக்கள் உண்மை நிலையை உணர்ந்து கொள்வதுடன் தேசத்துரோகிகள் மீது நாம் எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

## மன்சூர் காயம்

கொழும்பு, மே 14

முன்னாள் திருகோணமலை மாவட்ட அமைச்சரும் கல்முனை எம். பியுமான ஜனாப் எம். ஆர். எம் மன்சூர் கார் விபத்து ஒன்றில் காயம் அடைந்தார்.

## புதிய மாற்றுத் திட்டத்தை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்பதை இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது.

வன்செயல்கள் தொடர்வது, இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கு பேச்சுக்களை நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்காது.

### ஆக்கபூர்வ தீர்வு தேவை

நீண்டகாலமாக இழுபட்டு வரும் இப்பிரச்சினைக்கு அமைதியான ஆக்கபூர்வமான தீர்வு ஒன்றையே காணவேண்டும்.

தமிழர் அபிலாஷைகளை உள்ளடக்கியதான தீர்வு ஒன்றைக் காணும் திட்டவட்டமான நடவடிக்கைகளை இலங்கை அரசு உடனடியாகமேற்கொள்ளவேண்டும். இல்லையேல் இப்போது மீண்டும் ஆரம்பமாகியுள்ள பேச்சுக்களுக்கு குந்தகம் ஏற்படும்.

இலங்கை சென்ற திம்பரம் குழு.இலங்கை அரசவுடன் சில விவரமான திட்டங்களுடன் வந்துள்ளது.

சில முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகளில் தீர்க்கமான இடைவெளிகள் உள்ளன.

சட்டம்—ஒழுங்கு தமிழர்கள் மிகுந்த அக்கறை காட்டும் வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகியவைதான் அந்தத் தீர்க்கமான இடைவெளிகள்.

இலங்கை அரசின் யோசனைகளை இந்தியா மதிப்பீடு செய்து வருகிறது.

### மாற்றுத் திட்டம்

இதனிடையில் மாற்றுத்திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படி இலங்கையை இந்தியா கோரியுள்ளது.

நீதியான நம்பிக்கையான தும் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை இலங்கை அரசு சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் அதை தமிழர் தரப்பின் முன் வைக்க முடியும்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு இந்திய அரசு மிக முக்கியத்துவம் அளிக்கின்றது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் தீர்வு காண வேண்டும் என்றே இந்தியா விரும்புகின்றது-

இப்படி அமைச்சர் சிவ்சங்கர் சொன்னார்.

தி மு. க. உறுப்பினர் திரு. எம் கோபாலசுவாமி பேசுகையில், 'இலங்கையில் வன்செயல்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. தொடர்ந்து வன்செயல்கள் இடம்பெறுவதை நிறுத்தாவிட்டால், இலங்கையுடனான ராஜதந்திரத் தொடர்புகளை ரத்துச் செய்ய வேண்டி நேரிடும் என்று இந்தியா அறிவிக்க வேண்டும்'' — என்று சொன்னார்.

### இனியும் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேலை நாடுகளிடம் ராணுவ உதவி கோரியுள்ளார். இதன் மூலம் இனப்பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக்கி உள்ளனர். இனியும் இனப் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாக இந்தியா கணிக்கக் கூடாது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். இந்த நிலையில் திரு ஜெயவர்த்தன மீது எந்த அளவுக்கு இந்தியா நம்பிக்கை வைத்துள்ளது?

பேச்சுக்கள் தொடர்பாக முன்னர் தமிழர் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இப்படி இந்தியா இலங்கையிடம் கூறவேண்டும்.

குறிப்பிட்ட காலவரையறை வைத்து இனப் பிரச்சினைக்கு இந்தியா தீர்வு காண வேண்டும்.

இப்படி பல எம்பிக்கள் இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org